# கிழக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்), தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2017

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்), தரம் III பதவிக்கு மாகாண திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து **மட்டும்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2017.11.23 ஆகும். இப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :**

2.1. இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எழுத்துமூல போட்டிப்பரீட்சையொன்று நடாத்தப்படும். இப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளினால் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் மாகாண திறமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சையின் மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.3 இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தற்போது அரச/கிழக்கு மாகாண சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின், தேவையான தகைமைகளையுடையவர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களை தமது திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு அனுமதிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது முதல் நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 ற்கு அமைவாக. (MT-1-2016)
ரூபா. 29,840 – 10x300 – 11x350 – 10x560 – 10x660 – ரூபா. 48,890/- ஆகும்.

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

**04. ஆட்சேர்ப்பு செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள் :**

4.2.1. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரு தடவைக்கு மேற்படாதவாறு மொழி (சிங்கள / தமிழ் / ஆங்கிலம்), கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் உட்பட 05 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.3 **தொழில்சார் தகைமைகள் :**

4.3.1 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமாவொன்றை பெற்றிருத்தல்

அல்லது

4.3.2 மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தேசிய தொழிற்தகைமை – மட்டம் 05 (NVQ - 5) திறனானது பதவியுடன் சம்பந்தப்பட்ட வேலை தொடர்பாக கொண்டிருத்தல் வேண்டும்.

**05. பொதுவான தகைமைகள் :**

5.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

5.2. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

5.3. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக குறைந்தது ஒரு (01) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல்.

அல்லது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக குறைந்தது மூன்று வருடங்களாவது (03) தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்துவரும் ஒருவரை திருமணம் செய்து வேறு மாகாணத்திலிருந்து இந்த மாகாணத்திற்கு வந்த ஒருவர் அது சம்பந்தமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு :** பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க கட்டுப்பாடுடையவர்களாக வேண்டும்

**06. ஆட்சேர்ப்பு முறை :**

6.1. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் எழுத்துமூல போட்டிப்பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே எழுத்துப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக தீர்மானிக்கப்படும்.

6.2. இப்பதவி தொடர்பாக காணப்படும் வெற்றிடங்களுக்காக மாகாண திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

6.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம். மேலே 6.3 பந்தியில் கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**08. பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா 300/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**09. விண்ணப்பிக்கும் முறை :**

9.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 6.0 தொடக்கம் 12.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

9.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9.3. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

9.4. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/17/19** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

9.5. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 292,080/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

9.6. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2017 நவம்பர் மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

**10.** விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய அடையாள அட்டை ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**11.** பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**12. பரீட்சைத்திட்டம் :**

இப்பரீட்சை இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருப்பதோடு இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| தொழில்நுட்ப அறிவு | 100 | 02 மணித்தியாலங்கள் | 40% |

**உளச்சார்பு :** இவ்வினாத்தாளானது புள்ளி விபர இயலுமை, தர்க்க ரீதியான தீர்மானம் மற்றும் பொது அறிவு ஆகிய விடயங்களைக் கொண்டிருக்கும்.

**தொழில்நுட்ப அறிவு :**

1. இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு
    - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு
    - வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்
    - விவசாயத்துறையில் ஏற்றுமதி, இறக்குமதியின் நிலை
2. இலங்கையில் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு
3. மண் மற்றும் தாவர போசனை
    - பயிர்ச் செய்கையில் மண்ணின் இழையமைப்பு, கட்டமைப்பு, ஈரலிப்பு, உவர்த்தன்மை, பௌதீக மற்றும் இரசாயன தன்மைகளின் விளைவுகள்
    - தாவரங்களிற்கான மண்ணின் போசனைப் பொருட்களும், தாவர போசனைப் பொருட்களின் முகாமைத்துவமும்
    - தாவர ஊட்டச்சத்து தொடர்பான காரணிகளும் முக்கிய விடயங்களும்
4. நெல் உற்பத்தி
    - மண்ணின் காலநிலைத் தேவைகள்
    - நெல் வர்க்கங்கள்
    - நிலத்தினை தயார்ப்படுத்தலும் நாற்றுமேடை முகாமைத்துவமும்
    - நோய், பீடைக் கட்டுப்பாடு
    - பசளைப் பிரயோகம்
    - நீர் முகாமைத்துவமும் விளைச்சலை அதிகரிப்பதற்கான நவீன முறைமைகளும்
    - அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்
5. மறுவயற் பயிர்களை உற்பத்தி செய்தல்
    - பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, சோளம், மற்றும் ஏனைய வயற் பயிர்களின் வர்க்கங்கள்
6. மரக்கறி உற்பத்தி
    - மரக்கறி பயிர் நாற்று மேடை

      விவசாயத் திணைக்களத்தின் முக்கிய அவதானத்தை பெற்றுள்ள மரக்கறி வகைகளை அறிமுகப்படுத்த மற்றும் நடுகைச் செயற்பாடுகள், அறுவடை மற்றும் அறுவடைக்குப்பின்னரான நடவடிக்கைகள்
7. பழங்கள் உற்பத்தி
    - விவசாயத் திணைக்களத்தின் முக்கிய அவதானத்தை பெற்றுள்ள பழப்பயிர் வர்க்கங்களை அறிமுகப்படுத்தலும், பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலும்
8. பயிர்ப்பாதுகாப்பு
    - பயிர்களைத் தாக்கும் பிரதான நோய்கள் மற்றும் பீடைகளை அடையாளம் காணலும் முகாமைத்துவம் செய்தலும்
    - களைகளும், களைக்கட்டுப்பாட்டு முறைகளும்
    - விவசாய இரசாயனங்களை பாவிக்கும்பொழுது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைகள்
9. நிலக்கீழ் நீர் உட்புகுதலும் அதன் முக்கியத்துவமும்
10. மண் இரசாயனம்
    - மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும், ஏனைய பாதுகாப்பு முறைகளும்
11. நீர்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்
    - வெவ்வேறு பயிர்களுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் நீர் முகாமைத்துவம்
    - நுண் நீர்ப்பாசன முறைகள்
12. பண்ணை இயந்திரமயப்படுத்தல்
    - பண்ணை இயந்திரமயப்படுத்தலின் நன்மைகளும் தீமைகளும்
    - நிலப்பண்படுத்தலில் பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள்
    - நீர்ப்பாசனம் மற்றும் தாவரப்பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள்
    - பண்ணை இயந்திரங்களை இயக்குதலும், பராமரித்தலும்
13. தேனீ வளர்ப்பு
    - பொருளாதார முக்கியத்துவம்

- தேனீக் கூடுகளை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
- தேனை பிரித்தெடுத்து பதப்படுத்தி சந்தைப்படுத்தல்

14. அலங்காரத்தாவர வளர்ப்பு மற்றும் நில அலங்காரம்
    - பொருளாதார முக்கியத்துவம்
    - நில அலங்கார முறைகள்
    - வெட்டுப் பூ உற்பத்தி, பொதி செய்தல், சந்தைப்படுத்தல்

15. பாதுகாப்பு இல்லங்களில் பயிர்ச்செய்கை
    - முக்கியத்துவம்
    - திட்டமிடல்
    - பயிர்களைத் தெரிவு செய்தல்
    - பராமரித்தல் மற்றும் அறுவடை செய்தல்

16. கால்நடை வளர்ப்பு
    - கோழி வளர்ப்பு மற்றும் மாடு வளர்ப்பும், பால் உற்பத்தியும்
    - ஒருங்கிணைந்த பண்ணை முகாமைத்துவத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட கால்நடை வகைகளை பராமரித்தல்

17. விவசாய விரிவாக்கம்
    - விவசாய விரிவாக்க தந்திரோபாயங்கள் மற்றும் முறைமைகள்
    - விவசாய விரிவாக்கத்தில் தொடர்பாடல் முறைமைகள்

18. இழைய வளர்ப்பு
    - இழைய வளர்ப்பின் முக்கிய கோட்பாடுகள் மற்றும் வரலாறு தொடர்பான அறிவு
    - இழைய வளர்ப்பின் பிரயோகம், உதாரணங்கள்
    - இழைய வளர்ப்பின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

19. பயிர்ப் பாதுகாப்பு சட்டம் தொடர்பான அறிவு
    - பயிர்ப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பான அறிவு
    - பயிர்ப் பாதுகாப்பு முறைமைகள்

20. தாவரப் பாதுகாப்பு
    - தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் (தாவரங்கள் ∴ மரபணு பிளாஸ்மா)
    - தாவரப் பாதுகாப்பு முறைகள் (தாவரங்கள் / மரபணு பிளாஸ்மா)

21. உயிரியல் தொழில்நுட்பம்
    - DNA வின் முக்கியத்துவம்
    - மரபணு என்றால் என்ன? அதன் தொழிற்பாடுகள்
    - மரபணு பொறியியல் மூலோபாயங்களின் ஊடாக தாவரங்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள்

22. விவசாய அபிவிருத்தி

    தற்போதய விவசாய அபிவிருத்திக் கொள்கைகளும் அதன் முக்கியத்துவமும் விவசாய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், மத்திய, மாகாண அமைச்சுக்களின் கீழ் வரும் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய திணைக்களங்கள், மத்திய, மாகாண விவசாய திணைக்களங்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள், பிரிவுகளும் அவற்றின் கடமைகளும், விவசாயத் துறையில் தற்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளும் அது தொடர்பான கருத்துக்களும் விவசாய அபிவிருத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் வழிமுறைகள், விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் அனுகூலங்களினதும் பிரதிகூலங்களினதும் தாக்கங்கள்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன், சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் / கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பேரில், நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**ஐ.கே.ஜி.முத்துபண்டா**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**EX/Rec/17/19**

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பபடிவம்

**கிழக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்), தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2017**

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T,** சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(11 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**நிரந்தர வதிவிட மாவட்டம் :** ....................................................................................................

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/திருமதி/செல்வி ................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : MR.PERERA, A.B.C) ..............................................

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ..........................................................................

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ....................................................................................

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

1.5. தொலைபேசி இல. : ..................................................................................................

2.0. 2.1. நிரந்தர முகவரி : ..................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ..................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ...........................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இல.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

3.3. 2017.11.23 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

4.0. இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] முஸ்லிம் [ ] வேறு [ ]
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. கல்வித்தகைமைகள் :

5.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் :.........................
II. பரீட்சை சுட்டிலக்கம் :.........................
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் :.........................
II. பரீட்சை சுட்டிலக்கம் :.........................
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

6.0. தொழில்சார் தகைமைகள் :

6.1 நிறுவனத்தின் பெயர் : ……………………………………………………………………………………..

6.2 கற்கைநெறியின் பெயர் : …………………………………………………………………………………..

6.3 கற்கைநெறிக்கான காலம் : ………………………………………………………………………………..

6.4 கற்கைநெறியை பூர்த்தி செய்த திகதி :……………………………………………………………….....

7.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. …………………………………………………………….............

…………………………………………………………………………………………………………………

8.0. **அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,**

8.1. திணைக்களம் : ………………………………………………………………………...........................

8.2 தற்போதைய பதவி : ………………..………………………………………………………………………..

8.3. முதல் நியமனத் திகதி : ……………………………………………………………………………………...

8.4. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : …………………………………………………………………..

9.0. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு இங்கு ஒட்டவும் தொடர்பான விபரங்கள்

| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

10.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

…………………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

11.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 9.5 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் …………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :……………………..

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….

பதவி :…………………………………………………….…

முகவரி :………………………………………………..……

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

12.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :** (அரச/கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …............................................. அவா்களின் விண்ணப்பத்தை சிபாா்சு செய்து சமா்ப்பிக்கின்றேன். அவா் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………

திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி :……………………

முழுப் பெயர் :……………………………………………

பதவி :……………………………………………………

முகவரி :…………………………………………………..

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)